செய்தி வெளியீடு எண்:984 நாள்:29.10.2021

## செய்தி வெளியீடு

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் உள்ள வடக்கு கோடைமேலழகியான் கால்வாய் (2260 ஏக்கர்) , தெற்கு கோடை மேலழகியான் கால்வாய் (870 ஏக்கர்) , நதியுண்ணி கால்வாய் (2460 ஏக்கர்), கன்னடியன் கால்வாய் (12500 ஏக்கர்), கோடகன் கால்வாய் (6000 ஏக்கர்), பாளையங்கால்வாய் (9500 ஏக்கர்), திருநெல்வேலி கால்வாய் (6410 ஏக்கர்), மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மருதூர் மேலக்கால் கால்வாய் (12762 ஏக்கர்) , மருதூர் கீழக்கால் கால்வாய்(7785 ஏக்கர்) , தெற்கு பிரதானக் கால்வாய்(12760 ஏக்கர்), மற்றும் வடக்கு பிரதானக் கால்வாய் (12800 ஏக்கர்), ஆகியவைகளின் கீழுள்ள 86,107 ஏக்கர் நேரடி மற்றும் மறைமுக பாசன பரப்புகளுக்கு பிசான பருவ சாகுபடிக்கும், குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்கும் 01.11.2021 முதல் 31.03.2022 முடிய (151 நாட்கள்) பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து, தேவைக்கேற்ப, நீர் வரத்து மற்றும் நீர் இருப்பினை பொறுத்து, தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதனால், **திருநெல்வேலி** மற்றும் **தூத்துக்குடி** மாவட்டங்களில் உள்ள 86,107 ஏக்கர் நிலம் பாசன நிலங்கள் பயன்பெறும்.

**சந்தீப் சக்சேனா,**
**அரசு கூடுதல் தலைமை செயலாளர்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9